## September 30, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்காவுக்கான இந்திய ஏற்றுமதி முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதம் சரிந்துள்ளது.
   i. இது குறித்து வணிகத் துறை அமைச்சகத்தின் தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த ஜூலை மாதத்தில் இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கான ஏற்றுமதி சுமார் 800 கோடி டாலராக இருந்தது. அது கடந்த ஆகஸ்டில் 14 சதவீதம் சரிந்து 686 கோடி டாலராக உள்ளது.
   ii. அமெரிக்க அரசு இந்திய பொருள்களுக்கு ஆகஸ்ட் 7 முதல் 25 சதவீத கூடுதல் வரி யையும், ஆகஸ்ட் 27 முதல் மேலும் கூடுதலாக 25 சதவீத வரியையும் விதித்தது. எனினும், ஆகஸ்ட் மாதத்திலும் நடப்பு நிதியாண்டின் ஐந்து மாதங்களிலும் இந்திய பொருள்களின் முதன்மை ஏற்றுமதி சந்தையாக அமெரிக்கா உள்ளது.
   iii. கடந்த ஆண்டு ஆகஸ்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆகஸ்டில் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 7.15 சதவீதம் உயர்ந்துள்ளது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக, ஐக்கிய அரபு அமீரகம் (324 கோடி டாலர்), நெதர்லாந்து (183 கோடி டாலர்), சீனா (121 கோடி டாலர்), பிரிட்டன் (114 கோடி டாலர்) ஆகிய நாடுகளுக்கு இந்தியா அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறது என்று அந்தத் தரவுகள் தெரிவிக்கின்றன.
2. நைஜீரியா வின் வடமத்திய குவாரா மாகா ணத்தில் உள்ள ஒகே-ஒடே பகுதியில் ஆயுதக் கும்பலால் 12 வனத் துறை அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
   i. வடக்கு பகுதியில் திலம் மற்றும் நீருக்காக விவசாயிகளுக்கும், புலானி மரபினரான நாடோடிகளுக்கும் இடையே நீண்டகாலமாகமோதல் நிலவி வருகிறது. அகன் ஒரு பகுதியாக இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டிருக்களாம் என்று கூறப்படுகிறது.
3. கிழக்கு ஐரோப்பிய நாடான மால்டோவாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ரஷிய ஆதரவு கட்சிகள் தோல்வியடைந்தன. மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவான ஆக்ஷன் அண்டு சாலிடாரிட்டி (பிஏஎஸ்) கட்சி பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றி பெற்றது.
   i. மேற்குலகம் மற்றும் ரஷியாவுக்கு இடையிலான ஆதிக்கப்போட்டியாகக் கருதப்பட்ட இந்தத் தேர்தலின் முடிவுகளை ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் வரவேற்றுள்ளனர். தேர்தலில் ரஷிய தலையீடு இருந்தபோதிலும், ஐரோப்பிய யூனியனில் இணையும் தகுதியை தங்களது நாடு பெறுவதை உறுதி செய்யும் வகையில் மால்டோவா மக்கள் தீர்ப்பளித்துள்ளதாக தலைவர்கள் பாராட்டினர்.
   ii. உக்ரைனுக்கும் ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோ உறுப்பு நாடான ருமேனியாவுக்கு இடையே அமைந்த மால்டோவா, சோவியத் யூனியனிடம் இருந்து கடந்த 1991-இல் சுதந்திரம் பெற்றது. தொடக்கத்தில் ரஷிய சார்பு நிலைப்பாட்டை எடுத்துவந்த அந்த நாடு, அண்மை மேற்குலகை நோக்கிய பாதையைத் தேர்ந்தெடுத்து, ரஷியாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையிலான புவிசார் அரசியல் போர்க்கள்மாக மாறியது.
   iii. 2022-இல் உக்ரைன் மீது ரஷியா படையெடுத்ததைத் தொடர்ந்து, ஐரோப்பிய யூனியனில் இணைய மால்டோவா விண்ணப்பித்து, அதே ஆண்டில் உறுப்பினராகும் தகுதியுடைய நாடு என்ற அந்தஸ்தைப் பெற்றது. இதுதொடர்பான பேச்சுவார்த்தையை நடத்த ஐரோப்பிய யூனியன் தலைமை கடந்த ஆண்டு ஒப்புக்கொண்டது.

4. ஆசிய நீச்சல் சாம்பியன்ஷிப்பில், ஆடவருக்கான 10 மீட்டர் சிங்கர னைஸ்டு டைவிங்கில் இந்தியாவின் இண்டிவர் சாய்ராம், வில்சன் சிங் நிந்தௌஜம் இணை வெண்கலப் பதக்கம் வென்றது.
   i. இந்தப் பிரிவில் இந்திய வீரர்கள் முதல்முறையாகப் பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
   ii. வெண்கலம் வென்றுள்ள இந்திய இணை, அடுத்த ஆண்டு ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கத் தகுதிபெற்றது குறிப்பிடத்தக்கது.
5. உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் ஈட்டி எறிதலில் இந்தியர்கள், தங்கம், வெள்ளி என இரு பதக்கங்களை வென்று அசத்தினர்.
   i. ஆடவர் ஈட்டி எறிதலில் (எஃப்46) இந்தியாவின் ரிங்கு ஹூடா 66.37 மீட்டரை எட்டி தங்கம் வென்றார். உலக சாம்பியன்ஷிப்பில் இது அவருக்கு முதல் சாம்பியன் பட்டமாகும். சுந்தர் சிங் குர்ஜர் 64.76 மீட்டரை தொட்டு வெள்ளிப் பதக்கம் பெற்றார்.
6. ஆர்எஸ்எஸ் அமைப்பு தொடங்கப்பட்டு நூராண்டுகள் நிறைவடைவதை பொட்டி அக்டோபர் 1-இல் நினைவுத் தபால்தலையையும் நாணயத்தையும் பிரதமர் நரேந்திர மோடி வெளியிடஉள்ளார்.
   i. கடந்த 1925-ஆம் ஆண்டில் விஜயதசமி நாளில் தொடங்கப்பட்ட ஆர்எஸ்எஸ் அமைப்பு 100 ஆண்டுகளை எட்டுகிறது.
7. தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகிறது' என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
   i. அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதுபோல, ஐரோப்பிய யூனியன், நியூஸிலாந்து, ஓமன், பெரு, சிலி உள்ளநட்ட நாடுகளுடனும் தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு கத்தார், பஹ்ரைன் நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.
   ii. முன்னதாக, கடந்த ஆகஸ்ட் மாதம் ஆர்மீனியா, பெலாரஸ், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் உள்ளிட்ட நான்கு நாடுகளை உள்ளடக்கிய யூரேசியா பொருளாதார கூட்டமைப்பு (இஏஇயு) மற்றும் ரஷியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைங்களை இந்தியா மேற்கொண்டது என்றார்.
8. இந்தியா-பூடான் இடையே ரூ.4,000 கோடி யில் 89 கி.மீ. தொலைவுக்கு ரயில் பாதைகள் அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
   i. பூடானின் சம்ட்சி, ஜிலிபு நகரங்கள் முறையே அஸ்ஸாமின் கோக்ரஜார், மேற்கு வங்கத்தின் பனார்கத் நகரங்களுடன் ரயில் வழித்தடம் மூலம் இணைக்கப்படவுள்ளன. புது தில்லியில் திங் கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி ஆகி யோர் இதனைத் தெரிவித்தனர். கடந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி பூடான் சென்றபோது இதற்கான ஒப்பந்தம் கையொப்ப மானது.
   ii. இது தொடர்பாக அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மேலும் கூறுகையில், 'இத்திட்டம் இந்திய ரயில்வேயால் மேற்கொள்ளப் படுகிறது. இப்போதைய நிலையில் ரூ.4,033 கோடியில் இத்திட் டத்துக்காக ஒதுக்கப்படுகிறது. ரயில் வழித்தடம் அமைக்கும் செலவை இந்தியா முழுமையாக ஏற்றுக்

கொண்டுள்ளது.

9. இஸ்ரேல்-பாலஸ் தீனம் இடையே பரஸ்பரம் இரு நாடுகளின் இறையாண்மை, சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுடன் கூடிய அமைதிப் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் ஆதரவளித்து வருவதாக இந்தியா தெரிவித்தது.
    i. அதன்படி, ‘பாலஸ்தீனம் மீதான இந்தியாவின் கொள்கை நிலையானது. இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே சுமுக பேச்சுவார்த்தை மேற்கொள்ள இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. 1974-ஆம் ஆண்டில் மக்களின் சட்டபூர்வ பிரதிநிதியாகவும் தனிஅமைப்பாகவும் உள்ள பாலஸ்தீன விடுதலை அமைப்பிற்கு அரேபிய நாடுகள் இல்லாத முதல் நாடாக இந்தியா அங்கீகாரம் அளித்தது. அதேபோல் 1988-ம் ஆண்டில் பாலஸ்தீன நாட்டிற்கு அங்கீகாரம் அளித்த முதல் நாடாகவும் இந்தியா உள்ளது.

10. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-
    i. மையா சண்டு - மால்டோவாவின் ஜனாதிபதி